**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**வத்திராயிருப்பு**

**அசல் வழக்கு எண். 101 /2024**
**வா.சா. 1**

2026–ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள், 04 நாள், வாதி தரப்பு (வ.சா.1) சாட்சியின் வாக்கு மூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ன் படி திரு.மூ.ராமநாதன்,பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், வத்திராயிருப்பு அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| Name | சுந்தரம் | Caste | |
| Father / Husband's Name | முனியாண்டி | Calling | |
| Village | | Religion | |

தேதி 04.02.2026

**<u>முதல் விசாரணை</u>**

நான் இன்று இந்நீதிமன்றத்தில் எனது சாட்சிய முதல் விசாரணையாக சத்தியபிரமாண நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள சத்தியபிரமாண நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் என்னால் சொல்லப்பட்டவை தான் அதனை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன் பிராதில் கோரியுள்ளவாறு தீர்பாகும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**ஆவணங்கள்**

| | | |
|---|---|---|
| 1 | | 10(1) அடங்கல் உண்மை நகல் வா.சா.ஆ.1 ஆகும் |
| 2 | | சர்வே எண் 495/2 மற்றும் 495/3 க்கான இணைய வழி பட்டா வா.சா.ஆ.2 ஆகும் |
| 3 | | சர்வே எண் 466/5 க்கான இணைய வழி பட்டா வா.சா.ஆ.3 ஆகும் |
| 4 | | வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் அஞ்சலக ரசீது உடன் வா.சா.ஆ.4 ஆகும் |
| 5 | | அஞ்சல் ஒப்புதல் அட்டை (3 எண்ணங்கள்) வா.சா.ஆ.5 ஆகும் |
| 6 | | கிருஷ்ணம்மாள் மற்றும் முகமால் ஆகியோர்களுக்கு அனுப்பப்பட்ட |

| | | |
|---|---|---|
| | | வழக்கறிஞர் அறிவிப்பின் திருப்பப்பட்ட உறை (2 எண்ணங்கள்) வா.சா.ஆ.6 ஆகும் |
| 7 | | வாதி காவல் நிலையத்தில் தாக்கல் செய்த புகார் மனுவின் நகல் ஆவணம் நகலாக இருப்பதால் குறியீடு செய்ய பிரதிவாதிகளின் தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனை தெரிவித்தார் வா.சா.ஆ.7 ஆகும் |
| 8 | | வருமான வரி கணக்கு அடையாள அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது வா.சா.ஆ.8 ஆகும் |

**குறுக்கு விசாரணை**

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒம்/—எம்.இராமநாதன்/—
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு